ஆனால் நுகர்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் அங்காடிகள் மூலமாக அவற்றை விற்பதற்குரிய வகையில் அதை விரிவு படுத்தலாம் என்று முடிவு செய்து தற்போது ஆராய்ந்து வரு கிறோம். விரைவில் அது நடைமுறைக்குக் கொண்டு வரப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவரவர்களே, கூட்டுறவுக் கடையிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. சில நாட்களுக்கு முன் வடாற்காடு மாவட்டத்திற்கு விஜயம் செய்த நமது முதல்வர் அவர்கள் பல கடைகளை நேரடியாகவே சோதனை செய்திருக் கிறார்கள். கூட்டுறவுக் கடைகளின் நேரம் வரையறுக்கப் பட்டுள்ளதா? ஒரு குறிப்பிட்ட பகுதியில் 100 கிலோ சர்க்கரை வேண்டும் என்றால் 80 கிலோ.................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சர்க்கரை சம்பந்தப் பட்ட கேள்வி எல்லாம் கேட்க வேண்டாம். இது காய்கறி பற்றி கேள்வி.

வள்ளுவர் நகரில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 442— திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை துறைமுகப்பகுதியில் வள்ளுவர் நகரில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

1981 மார்ச் 23]

திரு. அ செல்வராசன் : தலைவரவர்களே, என்னுடைய தொகுதியிலே வள்ளுவர் நகரிலே குடிசை மாற்று வாரியம் வீடுகள் கட்டவேண்டும் என்று பல முறை இந்த சட்டமன்றத்திலே சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் அப்போது பதில் சொல்லி இருக்கிறார்கள். அதிக விரைவில் அதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு அந்த வீடுகள் கட்டப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இப்போது திடீரென்று அப்படிப்பட்ட திட்டம் இல்லை என்கிறார்கள். அதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இந்த குடிசைப் பகுதி தனியார் நிலமாக உள்ளது. இந்த நிலத்தைக் கையகப்படுத்த வாரியம் தீர்மானம் செய்துள்ளது. ஆனால் தனியார் நிலங்களை நியாயமான விலைக்கு கையகப்படுத்த இயலும் வகையில் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் நீக்கல்) சட்டத்தைத் திருத்தும் செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது. வரைவு திருத்தச் சட்டத்தை தயாரிக்க தொடர்புடைய கோப்பு சட்டத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்கூறிய சட்டம் திருத்தப்பட்டு இத்திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் திட்டம் மேற்கொள்ளப்படும்.

திரு. அ. செல்வராசன் : தலைவரவர்களே, நிலைமை இப்படி இருக்கின்றபோது அந்தப் பகுதியில் ஒரு பெரிய போர்டு போட்டு அதில் இந்தப் பகுதியின் குடிசை வீடுகள் மாற்றியமைக்கப்படும் என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே தனியார் துறையினரிடமிருந்து நிலத்தை வாங்குகின்ற வரையிலாவது அரசு அந்த போர்டை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அதைப்பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, திரு. செல்வராசன் அவர்களின் தொகுதியைப் போன்றதுதான் என்னுடைய தொகுதியிலே உள்ள குடிசைப் பகுதியும். ஆனால் அங்கே கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்திலேயே வீடுகள் கட்டுவது பற்றி போர்டுகள்எல்லாம் போடப்பட்டது. அதன்பின் ஆட்சி மாறி விட்ட பிறகு அந்த வீடு கட்டும் திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டதே. அதனுடைய காரணம் என்ன ? குறிப்பாக செட்டித் தோட்டம் போன்ற பகுதிகளில் அந்தத் திட்டங்கள் நிறுத்தப்பட்டதே, அதற்குக் காரணம் என்ன ?

[1981 மார்ச் 23

[முற்பகல் 10-00]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி சென்னை துறைமுகப் பகுதியில் வள்ளுவர் நகரில் உள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டுவது பற்றியது.

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*வினா எண். 443—திரு. என். எஸ். வி.சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 23 பேரூராட்சிகளுக்கு கிராமக்கூட்டு குடிநீர்த் திட்டம் எப்போதிருந்து செயல் படுத்தப்படும் ?

(ஆ) கால தாமதத்துக்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) இத்திட்டத்தின் தலைமைப் பணியிடமாக தேர்ந்தெடுக்கப்பட்ட சாயர்புரம் பகுதியில் ஆழ்கிணறுகள் தோண்டி நீரெடுக்க ஆட்சேபனை தெரிவித்திருக்கும் விண்ணப்பங்கள் அரசு பரிசீலனையில் இருப்பதால், திட்டம் செயற்படுத்த காலதாமதம் ஆகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு வினா விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 23 பேரூராட்சிகளுக்கும் கிராமக்கூட்டு குடி நீர்த் திட்டத்தின் கீழ், குடிநீர் வழங்கும் பணி மிக மிக அவசியமானது, அவசரமானதும் கூட. அதை எதிர்த்து அரசுக்கு முறையீடுகள் வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த முறையீடுகள் மீது அரசு எப்பொழுது நடவடிக்கை எடுக்கும் ? விரைவில் இந்த திட்டத்தை அமுல் செய்ய அரசு என்ன முனைப்பான நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?